Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

மலர் 7 இதழ் 99


National Tamil Daily தேசிய தினசரி

(21-5-65)

விசுவாவசு வைகாசி 8 முஹர்ரம் பிறை 19 வெள்ளிக்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |




# மீண்டும் ராணுவ தாக்குதல்

## மீனவர்களை அடித்து உதைத்தனராம்

யாழ்ப்பாணம், வெள்ளி

மண்டைதீவைச் சேர்ந்த ஆறு மீன் பிடிகாரர்கள், பூநகரிப் பகுதியிலுள்ள 'கரியிறவு' என்ற இடத்தில் மீன் பிடிப்பதற்காக முகாமிட்டிருந்தபோது இராணுவத்தினர் அவர்களை கைது செய்து, அடித்து உதைத்து, வதைத்த பின் கிளிநொச்சிப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர் என்று அறியப்படுகிறது.

சட்டவிரோதக் குடியேற்றகாரர் என்ற சந்தேகத்தின் மீதுதான், இலங்கையர்களான இந்த மீன்பிடிகாரர்கள் இராணுவத்தினரால் தாக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

பூநகரிப்பகுதியில் மீன்பிடிப்பதற்காக தங்கியிருந்த மீனவர்கள், பக்கத்திலுள்ள காட்டில் தடி வெட்டிக் கொண்டிருந்த சமயம், ஜீப்பில் வந்த இராணுவத்தினர், மீன்பிடியாளர்களையும் செம்பன்குண்டு இராணுவ முகாமுக்கு, ஜீப்பில் ஏற்றிச் சென்றார்களென்றும், அங்கே அவர்களை, அடித்து உதைத்தபின், கிளிநொச்சி பொலிஸில் ஒப்படைத்தனர் என்றும் தெரியவருகிறது.

மீன்பிடியாளர் ஒருவருக்கு ஆங்கிலமும், மற்றொருவருக்குச் சிங்களமும், தெரியுமென்றும் இராணுவத்தினரால் தாக்கப்பட்டசமயம், தாங்கள் சட்டவிரோதக் குடியேற்றக்காரர் அல்லவென்று சிங்களத்தில் தெரிவித்தனரென்றும் பின்பும் இராணுவத்தினர் கொடுமைப்படுத்தினரென்றும் அறியப்படுகிறது.

இராணுவத்தினரால் தாக்கப்பட்ட மீனவர்களான மண்டைதீவைச் சேர்ந்த, வெளிச்சோர் மரியாம்பிள்ளை, ஏ. செல்வராசா, அந்தோனிப்பிள்ளை சவரம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை சூசைப்பிள்ளை, மடுத்தீன் அந்தோனி பொன்னுத்துரை, மடுத்தீன் சிங்கராசா ஆகிய ஆறுபேர்களையும், கிளிநொச்சி பொலிஸார் விசாரணை செய்த பின் 2000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்களென்றும் தெரியவருகிறது.

கிளிநொச்சியிலுள்ள சறுான் சொந்தக்காரர், அவர்களைப் பிணை எடுத்து உணவு கொடுத்து பிரயாண வசதியளித்து மண்டைதீவுக்கு அனுப்பி வைத்தார். இச்சம்பவம்பற்றி ஊர்காவற்றுறை எம். பி. திரு வ. நவரத்தினத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டொமினிக்கன்

சாந்தாடொமிங்கோ மே 20

டொமினிக்கன் குடியரசில் நேற்று ஏற்பட்ட சண்டையில் 5 அமெரிக்க வீரர்கள் காயமடைந்ததாயும், ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கக்கூடும் என்றும் அறியப்படுகிறது. இதுவரை மொத்தம் 118 அமெரிக்க வீரர்கள் மாண்டிருப்பதாயும், 99 பேர் காயமடைந்திருப்பதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

## மந்திரிக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

உள்ளூராட்சித்துறை மந்திரி திரு. எம். திருச்செல்வத்திற்கு வட்டுக்கோட்டை கிராமசபையின் சார்பில் இன்று மாலை கிராமசபையில் வரவேற்பளிக்கப்படவிருக்கிறது.

இவ்வரவேற்பு வைபவத்தில் வட்டுக்கோட்டை எம். பி திரு. ஏ. அமிர்தலிங்கம் உட்படப் பலர் கலந்துகொள்வார்கள்.

பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு

## நைலோன் வலை, யந்திர வள்ளங்கள் அன்பளிப்பு

### 'கெயர்' ஸ்தாபனம் உதவி

பருத்தித்துறை, வியாழன்

சூறாவளியால் பாதிக்கப்பட்ட பருத்தித்துறை சுப்பர்மடத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு 'கெயர்' ஸ்தாபனம் அன்பளிப்பாக 7055 ரூபாபெறுமதியான நைலோன் மீன்பிடிவலைகளை இன்று வழங்கியது.

பருத்தித்துறை வாடிவீட்டில் வைத்து இவை விநியோகிக்கப்பட்ட போது உதவி அரசாங்க அதிபர் திரு பெருமைபிள்ளை கெயர் ஸ்தாபன பிரதிநிதி காரியாதிகாரி ஜே. டி. ஆர்னல்ட், பருத்தித்துறை எம். பி. திரு க. துரைரத்தினம், நகரசபைத்தலைவர் திரு க. நடராசா மீன்பிடி இலாகா அதிகாரிகள் கூட்டுறவு உத்தியோகத்தர் ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

மேலும் 52 ஆயிரம் ரூபா பெறுமதி உடைய இரண்டு இயந்திர வள்ளங்கள், ஐஸ் உற்பத்தி செய்யும் 37 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு யந்திரம் முதலானவையுடன் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான உதவிகளை அளிக்க முன்வந்திருப்பதாயும், தெரிவிக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர், காரியாதிகாரி ஆகியோர் கெயர் ஸ்தாபனத்தாருக்கு நன்றி பாராட்டியதுடன் இந்த உதவியை நல்லவழியில் பயன்படுத்தி முன்னேற வேண்டியது அவசியமும் கட்டாயமுமாகுமென மீனவர்களுக்குத் தெரிவித்தனர்.

## "மயிலிட்டியில் மீன்பிடித் துறை அமைத்துத் தருக?"

### காங்கேசன்துறைப் பட்டினசபை கோரிக்கை

காங்கேசன்துறை, வியாழன்

இலங்கையில் மீன்பிடித் தொழிலில் முதலிடம் வகிக்கும் மயிலிட்டியில் ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைப்பது பற்றி அரசாங்கம் இன்னும் யோசனை செய்யவில்லையென்றும் இதன் அவசியத்தை உத்தேசித்து உடனடியாக மயிலிட்டியில் ஒரு மீன்பிடித்துறையை அமைத்துத்தரும்படி மீன்பிடி அமைச்சரையும் காங்கேசன்துறை எம். பி. யையும் கேட்டுக்கொள்வதென்றும் கூறும் தீர்மானம் காங்கேசன்துறை பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பட்டினசபைத்தலைவர் திரு. க. கிருபாமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 6-ம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். சிவனடியார் இதற்கான பிரேரணையைக்கொண்டு வந்தார்.

கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

'நீர்கொழும்பில் சிங்களத்தைப் போதனா மொழியாகக் கொண்ட மீன்பிடிப் பயிற்சி நிலையமொன்று இருக்கிறது. இதைப்போன்று தமிழைப் போதனாமொழியாகக்கொண்ட

(6-ம் பக்கம்பார்க்க)

## பிரிட்டிஷ் யோசனை தோல்வியுறுமா?

### கட்ச் பகுதியில் இருசாராரும் கடைப்பிடிக்கும் கடும்போக்கு

கராச்சி, மே 20

இந்தியா நெருக்கடியைக் குறைக்க உண்மையில் விரும்பினால் கட்சிலுள்ள சகல துருப்புக்களையும் அது வாபஸ் செய்யவேண்டும் என பாகிஸ்தான் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆனால் கடந்த ஜனவரி 1-ம் திகதி இருந்த நிலை அங்கு ஏற்படவேண்டும் என்பது இந்தியாவினது கோரிக்கை. பிரிட்டிஷ் யோசனையும் இதை வற்புறுத்துவதாகக் கூறப்படுகிறது.

இந்தியா, தனது சொந்தப் பிரதேசத்திலிருந்து துருப்புக்களை வாபஸ் பெறுதென்றும் ஆனால் பாகிஸ்தான் தனது ஊடுருவல் பிரதேசத்திலிருந்து வாபஸ் பெறவேண்டும் என்றும் இந்தியா கோருவதாய் ஏற்கனவே கூறப்பட்டது.

பிரிட்டன் தெரிவித்திருக்கும் யோசனை எவ்வளவு தூரம் வெற்றி பெறும் என்ற சந்தேகம் இங்கு ஏற்படுகிறது. கட்ச் பகுதியில் பாகிஸ்தான் துருப்புக்களை வாபஸ் பெறுவிட்டால் இந்தியா பலவந்தமாக அதை வாபஸ் பெறச் செய்யும் என ஏற்கனவே டில்லியில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## 127 பேருடன் பாகிஸ்தான் விமானம் நொறுங்கியது

### கெய்ரோவுக்கருகே சம்பவம்

கெய்ரோ, மே 20

127 பேருடன் சென்றுகொண்டிருந்த ஒரு பாகிஸ்தானிய பிரயாணிகள் ஜெட் விமானம், கெய்ரோவுக்கு வடக்கே 22 மைல் தூரத்தில் பாலைவனத்தில் விழுந்து நொறுங்கியது. இச்சம்பவம் இன்று விடியற்காலை நடைபெற்றது.

இந்த விமானத்தில் 115 பிரயாணிகளும், 12 விமான சிப்பந்திகளும் இருந்தனர். மீட்பு வேலைக்காக ஹெலிகோப்டரில் உதவி கோஷ்டியினர் சென்றி[illegible] தெரியவில்லை.

இந்த விமானம் சவூதிஅரேபியாவிலிருந்து லண்டனுக்குச் சென்றுகொண்டிருந்தது. கெய்ரோவுக்குச் செல்லும் வழியில் மலைச்சிகரம் ஒன்றில் மோதி இது நொறுங்கியது.

## நெடுந்தீவில் தண்ணீர் பஞ்சம்

நெடுந்தீவு, வியாழன்

கடந்த மூன்று தினங்களாக குழாய் மூலம் குடிதண்ணீர் பெறமுடியாத நிலை இங்கு ஏற்பட்டுள்ளது.

குழாய் மூலம் தண்ணீர் பெற உதவியாக இருந்த மோட்டார் சாரதி வெளியூர் சென்றிருப்பதே தண்ணீர் பஞ்சத்திற்குக் காரணம். அம்மோட்டாரை வேறொருவர் இயக்குவதற்கு இல்லாமையினால் மக்கள் குடிதண்ணீர் இன்றி மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அஞ்சாநெஞ்சம் படைத்த, இரக்கச்சிந்தம் உள்ள காணயமுள்ள, கண்ணியம் வாய்ந்த மனிதத் தன்மைபடைத்த ஒரு சமுதாயத்துக்குத்தான் ஜனநாயகத்தைப் பெற உரிமையுண்டு.

— டாக்டர் ராதாகிருஷ்ணன்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna. Telegrams: "EELA NADU" Jaffna Phone: 280.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு வைகாசி ௴ 8 உ (21-5-65)


## தந்திச் சேவை

இம்மாதம் இரண்டாவது வாரத்தில் மட்டும் இருபத்திரண்டாயிரத்து ஐநூறு தந்திகள் தபாலில் அனுப்பப்பட்டுள்ளனவாம். இது இலங்கையைப் பொறுத்தளவில் அதிசயமல்ல. ஆனாலும் இதே நிலை நீடிப்பது நிச்சயம் இலங்கையின் வளர்ச்சிக்கு உதவி புரியாது.

இந்த 22,500 தந்திகளில் அவசரத் தந்திகளும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட வேண்டிய தந்திகளும் அடங்குமாம். வதந்திகள் தபாலில் அனுப்பப்படுவதற்குப் பல காரணங்கள் கூறப்படுகிறது. இதற்கு முன்பும் இதுபற்றிக் காரணங்கள் பல தெரிவிக்கப்பட்டன, விசாரணைகளும் நடைபெற்றிருக்கின்றன. நிலைமை மோசமடைந்திருக்கிறதே யன்றி திருந்தவில்லை. அவசர அலுவல்களுக்காகவே தந்திச் சேவையை மக்கள் உபயோகிக்கின்றனர். தபால் சேவை இருப்பது பொதுமக்களுக்கு நன்கு தெரியும். தந்திச் சேவையைவிட தபால்சேவை செலவு குறைந்தது என்பதும் அவர்களுக்குத் தெரியும். அவர்கள் செலவைப் பொருட்படுத்தாமல் தந்திச் சேவையை உபயோகிப்பது தங்களது அவசர அலுவல்களைச் செய்வதற்குத்தான் என்பதை தந்திப்பகுதியினர் உணராதது விந்தையாக இருக்கிறது. தந்திகள் அனுப்ப முடியாவிடின் அவற்றை ஏற்க மறுத்துவிடுவது அவர்களுக்கும் பொதுமக்களுக்கும் நல்லது; தந்திகளை ஏற்று அதற்குரிய கட்டணத்தையும் வசூலித்துக் கொண்டு சாவதானமாக அவற்றைத் தபாலில் அனுப்புவது பெரும் அநியாயம், தந்திச் சேவையை நிறுத்திவிட்டு 'தபால்தந்தி' என்று ஒருபுதிய சேவையை ஆரம்பிப்பதுமேல்!

தந்திகள் தபாலில் அனுப்பப்படுவதற்கு தந்திக்காரியாலயத்தில் உள்ள ஊழியர்கள் தங்கள் வேலையைச் சரியாகச் செய்யாதது ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. கொழும்பு மத்திய தந்திக் காரியாலயத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் மேற்பார்வை அதிகாரிகளும்கூட "மேலதிகநேர வேலை" ஊதியத்திலேயே தங்கள் வாழ்க்கையை நடத்துவதாகவும் தந்திகள் தாமதமாவதற்கும் தபாலில் அனுப்பப்படுவதற்கும் இதுவும் ஒரு காரணம் என்று கூறப்படுகிறது. இதில் உண்மையிருப்பின் இதைவிட்டு இலங்கையர்கள் நிச்சயம்பெருமைப்பட முடியாது. இதுசம்பந்தமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவசியம்.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட தீப்பெட்டித்தொழிற்சாலை மூடப்பட வேண்டியேற்பட்டதும் கல்லோயா சீனித் தொழிற்சாலையில் உற்பத்திச் செலவு அதிகரித்ததற்கும் தொழிலாளர் தமது வேலையைச் சரிவரச் செய்யாததும் ஊதியத்திற்கேற்ப உழைத்து உற்பத்தியைப் பெருக்காததுமே காரணம்; இலங்கையின் தந்திச்சேவைபற்றி ஆராய்ந்த ஜப்பானிய நிபுணர் கோஷ்டியொன்று சமீபத்தில் சமர்ப்பித்த ஒரு அறிக்கையில் கொழும்பு மத்திய தந்திக்காரியாலயத்தில் 'மந்தகதி'யில் வேலை நடைபெறுகிறது எனத் தெரிவித்திருந்தது. வேலை எவ்விதம் நடைபெறுகிறதென்பதைக் கணிக்கும்பொருட்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உத்தியோகத்தரும் எத்தனை தந்திகளை அனுப்புகிறார்களென்றும் ஏற்றுக்கொள்கிறார்களென்றும் விபரப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டுமென நிபுணர் கோஷ்டி யோசனை தெரிவித்திருந்தது. ஆனால் அந்த யோசனையை அமுல் நடத்த தொழிற்சங்கம் எதிர்ப்புத் தெரிவித்ததாம். தொழிலாளரின் உரிமையைப் பாதுகாக்க வேண்டியது தொழிற்சங்கங்களின் கடமை. உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற்றுக்கொடுக்கவேண்டியதும் அவற்றின் பொறுப்பு. அதேசமயம் ஊதியத்திற்கேற்ப தொழிலாளர் உழைக்க வேண்டுமென்பதையும் தொழிற்சங்கங்கள் மறந்துவிடக்கூடாது. பொதுமக்களின் ஆதரவு ஊழியர்களுக்கும் அவர்களது தொழிற்சங்கங்களுக்கும் அவசியம்.

தந்திகளைத் தபாலில் அனுப்புவதைத் தடுக்க வேண்டியது அவசியம், இதற்கு தபால், தந்திப்பகுதி ஊழியர்களும் ஒத்துழைப்புக்கொடுக்கவேண்டும், தந்திப்பகுதியினரும், தபால்தகவல் அமைச்சரும் சம்பந்தப்பட்ட ஊழியரின் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் அழைத்துப் பேசி இப்பிரச்னைக்கு ஒரு முடிவு கண்டு தந்திச் சேவையை விரைவில் சீராக்க வேண்டியது அவசியம்.

# ஆறுகிரகச்சேர்க்கை பற்றி அஞ்சவேண்டியதில்லை

## தமிழ்பேசும் இனம்தம்மை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்

—சோதிடக் கலாநிதி க. வேலுப்பிள்ளை—

29-5-65 முதல் 1-6-65வரை ஆறு கிரகங்கள் இணைவதாலும், 30-5-65-ல் பூரண சூரிய கிரகணம் நிகழவிருப்பதாலும் பொதுமக்களிடையே மீண்டும் பீதி கிளப்பிவிருக்கின்றது 4-2-62-ல் நடைபெற்ற அஷ்ட கிரக சேர்க்கை குறித்து அச்சம் தெரிவிக்கப்பட்டும், வதந்திகள் பரப்பப்பட்டும் முடிவில் அவையனைத்தும் முறியடிக்கப்பட்டன அன்று அச்சுறுத்தியவர்கள் அசந்துபோயிருக்கும் சந்தர்ப்பத்தில் மீண்டும் சப்தகிரகங்களின் கூட்டுறவு குறித்தும் பூரண சூரிய கிரகணம் குறித்தும் சஞ்சலம் தரக்கூடிய செய்திகளைப் பரப்ப முனைவது வருந்தத்தக்கது அஷ்டகிரகச் சேர்க்கையின் போது நான் குறிப்பிட்ட அதே கருத்தைத்தான், சப்தகிரகங்களின் கூட்டுறவின்போதும், நடைபெறவிருக்கும் பூரண சூரிய கிரகணத்தின்போதும் வலியுறுத்த விரும்புகிறேன், இவ்வித சந்தர்ப்பங்களில் நாட்டுமக்களைப் பீதியிலிருந்து காப்பாற்றுவது நீங்காத கடமையாகும்.

இச் சப்தகிரகங்களின் கூட்டுறவால் விளையப்போகும் பலாபலன்களைச் சிறிது ஆராய்வோம்.

அசுர குருவாகிய சுக்கிரன் வீட்டில் தேவகுரு உட்பட, சப்தகிரகங்களாக சூரியன், சந்திரன், ராகு, வியாழன், புதன், சுக்கிரனும் கூடி 30-5-65முதல் 1-6-65 வரை இடபராசியில் கார்த்திகை 2-ம் பாதத்தில் ஆரம்பமாகி, மிருகசீரிடம் 3-ம் பாத ஆரம்பத்துடன் முடிவடையும். இந்த ராசியின் ஆரம்பப்பாகை தொடக்கம் முப்பது பாகை வரை கிரகங்கள் பரவலாக நிற்பதால், சப்தகிரகக்கூட்டின் உத்வேகம் எதிர்பார்ப்பதை விடக் குறைவாகத்தான் இருக்கும், எனவே அதிக அச்சமடைய வேண்டிய அவசியமில்லை. கடந்த அஷ்டகிரகத்தின்போது 279 பாகைக்கும், 295 பாகைக்குமிடையில் எட்டுக்கிரகங்கள் நெருங்கிய தொடர்பு கொண்டமையால் ஏற்பட்ட வேகசக்தி, அத்தினம் முதல் 7 ஆண்டுகள் 11 மாதங்கள் வரை நீடித்திருக்குமெனக்கண்டோம். உதாரணமாக சமீபத்தில் ஏற்பட்ட சூறவளியும் இதன் விளைவுகளில் ஒன்றாகும்.

### திடீர் விளைவுகள் இல்லை

இச்சப்த கிரகங்களின் கூட்டுறவு 58 பாகை 20 கலையில் ஆரம்பமாகி, 60 பாகையில் முடிவடைகின்றது. இந்நிலையில் சப்த கிரகங்கள் மிகவும் நெருக்கமாக உறவாடுகின்றன என்று இயம்புவதற்கு இடமில்லை. பாரதூரமான விளைவுகளோ, திடீர் திருப்பங்களோ உடனடியாக ஏற்படுமென்றோ அல்லது காலக்கிரமத்தில் நிகழுமென்றோ கொள்ளுவதற்கில்லை. இக்கூட்டுறவின் விளைவுகள் 5 ஆண்டுகள் 9 மாதங்கள் வரை நீடிக்குமெனினும், இடையிடையே சில தொல்லைகள் தோன்றினாலும் பின்விளைவுகளும் கட்டுக்கடங்கியவையாகவே இருக்கும்.

### விளைவுகள்

மேகாதிபதி சந்திரன் உச்சம்பெற, இராஜாதிபதி சூரியன், ராகுகூடி கிரகணமாக:- எமது நாட்டைப் பொறுத்தவரையில் சமமழை, கடற்கொந்தளிப்புச் சிறிய அளவில் கரையோரப்பகுதிகளில் நிகழ்தல், தொற்றுநோய்கள் பரவுதல், புற்றுநோய் தோன்றுதல், இருமல் கபம், சீதளம் சம்பந்தமான ரோகங்கள், இரத்தநாளங்களின் கோளாறுகள், அகாலமரணங்கள் அதிகரித்தல், கஷ்டப் பிரவங்கள் கூடுதல், அக்கினி - ஆயுத பீடைகள், மாதர்களுக்கு உடலக்குறைவுகள், சிறுவர்களுக்கு கிருமிகளினால் ஏற்படும் பிணிகள் தோன்றக்கூடும்.

### விளைபொருட்கள்

மேகாதிபதி சந்திரன், இராஜாதிபதி சூரியனுடன் கூடி, தானியாதிபதி புதன் அஸ்தமனப்பட, குரு முதல் மற்றையக் கிரகங்கள் சேர்க்கை பெற:-

நாட்டின் விளைபொருட்களில் மந்தநிலைஏற்படும். சிறுதானியம் நன்மைதரும் தனதானியம் அதிக விளைச்சலைக் கொடுக்குமாயினும், ஏற்றுமதி உணவுப் பிரச்னையில் அதிக சிக்கலுக்கு இடமில்லை.

### ஆட்சிபீடம்

இராசா சனி ஆட்சியில் இருக்க, மந்திரி செவ்வாய் நேரில் பார்க்க குருமுதல் அறுவர் சனிக்கு நான்கில ரிஷபத்தில் இருக்க:-

அரசுக்கட்டில் இருக்கும் கட்சிக்கு ஆபத்து ஏற்பட்டபோவதாக மனமயக்கம் ஏற்படினும், அரசாங்கம் இச்சப்த கிரகக் கூட்டுறவால் பலமடையுமே தவிர, பலவீனமடைய முடியாது. எதிர்க்கட்சிகள் தங்களுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கமுனையினும் அக்கட்சிகளுக்கிடையில் அபிப்பிராயபேதங்கள் தோன்றுவதனால் அரசாங்கத்துடன் இணைவதற்குச் சிலர் இடம்மாறினால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

### தொழிலாளர்கள்

அறுவர்கூடினும், இருகுரு சித்திரயோகம்பெற்று, இராசா சனிக்கு 10-ம் இடத்தை அறுவரும் நோக்க, கேது இருப்பினும், செவ்வாய் வீட்டைப் பார்க்க:-

தொழிலாளர்கள் மேலும் வலுவடைவர், சில சந்தர்ப்பங்களில் வேலைநிறுத்தங்கள் ஏற்படினும், அவைகள் சுமுகமானமுறையில் தீர்த்துவைக்கப்படும். மேலும் தொழிற்சங்கங்களில் அரசியல்வாதிகளின் செல்வாக்குப் படிப்படியாகக் குறைந்துவரும்.

### மதம்

தேவகுரு சுக்கிரனும்' அசுர குரு வெள்ளியும் அவ் வீட்டில் ஆட்சி நட்பாய் அறுவர் கூடியிருக்க:-

மதகுருமார்களின் புகழ் பரவுவதுடன், மக்களும் ஆத்மீக விடயங்களில் அதிககாட்டம்செலுத்துவர், இதனால் பலாத்காரச்சம்பவங்களும், துவேஷமனப் பான்மையும் குறையும். தீவிரவாதிகளின் மதிப்பு மங்கிவரும். பெரும் பான்மையினருக்கும், சிறுபான்மையினருக்கும் மத்தியில் திரைபோடும் பிரச்னைகள் பல மறைந்துபோகும்.

### தமிழ் பேசும் இனம்

புதன், சூரியன் உடன்கூடி, அஸ்தமனப்படினும்; இருகுருவும் சந்திரனும் சேர்ந்து யோகம்பெற:-

தமிழ்ப் பேசும் இனத்தைப் பொறுத்தவரையில் நல்லசூழ்நிலை உருவாகினும், சில தலைவர்கள் மத்தியில் ஏற்படும் தலைமைப்போட்டியால் பாதகமான முடிவுகள் ஏற்படாவண்ணம் பாதுகாத்தல் நன்று. தமிழ்ப்பேசும்மக்கள் ஓரே அணியின்கீழ் ஒற்றுமையாக நிற்பதற்கான சந்தர்ப்பங்களும் ஏற்படக்கூடும்,

### பூரண சூரியகிரகணம்

30-5-65-ல பூரண சூரியகிரகணம் நிகழ்வதால், அக்கால எல்லைக்குள் நீராடல், பழைய பதார்த்தங்கள், பழங்கள் சாப்பிடுதல், தயிர், பால், மோர், குளிர்பானங்கள் அருந்துதல் மாமிசம் உண்ணல் தவிர்க்கப்படுதல் நன்று. தவறின் கோளாறுகளுக்கு இடமளிக்கலாம். இவை தவிர அஞ்சவேண்டிய அவசியம் இல்லை.

### உலகநாடுகள்

மேலைநாடுகளில் பனிப்போர்கள் வலுவடையும், பயங்கர ஆயுத உற்பத்திகள் பெருகும், அவநம்பிக்கை வளரும், விஞ்ஞானத்துறையில் மேலும்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

அடிவாரத்திலிருந்து திருப்பதி கோவில் 7 மைல் தூரம். மலைமீது தேவஸ்தானத்தால் முதல் நம்பர் ரஸ்தா போட்டு பஸ் சேவை நடத்துகிறார்கள். முன்னரெல்லாம் நடந்துதான் ஏழுமலை தூரமும் செல்ல வேண்டும். முடியாதவர்கள் "டோலி"யில் செல்லுவர். இப்போது அந்த ரஸ்தாவில் டாக்ஸிகளையும் தேவஸ்தானத்தார் விடுகின்றனர். டாக்ஸிக்கு மலையில் ஏறுவதற்கு மட்டும் 17 1/2 ரூபாய் வாடகை வாங்குகின்றனர்.

மற்ற கோவில்களைப் போலல்ல திருப்பதி தரிசனம் அதிகாலை 4 மணிமுதல் 7 மணி வரையில் விசுவரூபதரிசனமென்று பெயர். யாரும் கட்டணம் செலுத்தாமல் உள்ளே சென்று தரிசிக்கலாம். பின்னர் செல்லுபவர்கள் கட்டணம் செலுத்த வேண்டும், ஐந்து பேருக்கு 18 ரூபாய், 4 பேருக்கு சகஸ்ரநாமத்துக்கு 7 1/2 ரூபாய், இப்படி பலபல படித்தரங்கள். விசுவரூபதரிசனம் பார்க்க வேண்டுமானால் முதல் நாள் இரவே மலைக்குச் சென்றால் தான் அங்கு ஸ்நானம் செய்துவிட்டு தரிசிக்க வசதியாக இருக்கும்.

• • •

அதிகாலை 3 மணிக்கே தேவஸ்தான பஸ் ஸ்டாண்டில் பெருங் கூட்டம். கியூவரிசையிலே குடும்பம் குடும்பமாக மூட்டை முடிச்சுகளுடன் நூற்றுக் கணக்கானவர்கள் மணிக் கணக்காக காத்திருந்தனர். அந்த நீண்ட 'கியூ'வைக் கண்டதும் திகைத்து, ஒரு டாக்ஸியை அமர்த்திக்கொண்டு சென்றோம். அதிகாலையில் மலைமீது செல்லும்போது அழகான இயற்கைக் காட்சிகள், சுகமான குளிர்ந்த காற்று. சுமார் 75 முடுக்குகளைக் கடக்கவேண்டியிருப்பினும், யாத்திரை வெகுசுகம். ஏழுமலை ஆண்டவனின் அருளாட்சியின் சிறப்புகளைப் பார்த்துக்கொண்டே முக்கால் மணிநேரத்தில் யாதும் கஷ்டப்படாமல், கோவில் வாசலுக்கே வந்துவிட்டோம்,

மலைமீது நவீன வசதிகளுடன் கூடிய பல பங்களாக்கள் 'குடில்கள்' முதல்யவற்றைக் கட்டி, தேவஸ்தானத்தார் வாடகைக்கு யாத்திரிகர்களுக்கு விடுகின்றனர். ஒருசில மணி நேரத்தில் தரிசித்து விட்டுச் செல்லுபவர், தங்கள் பெட்டி மூட்டைகளை வைக்க ஒரு காரியாலயம். அங்கு இரவு பகலாக சிப்பந்திகள் இருந்து நமது பெட்டிகளை பாதுகாத்துக் கொடுக்கின்றனர், கட்டணம் ஒன்றும் கிடையாது.

கோவில் வாசற் படியில் எங்குமே கண்டிராதபடி, பக்தர்கள் கால் கழுவ ஒருவிதமான ஏற்பாடு செய்துள்ளனர். பல துவாரங்களிடப்பட்ட நீண்ட இரும்புக்குழாயிலிருந்து, தண்ணீர் எப்போதும் மெதுவாகத் தெளித்துக் கொண்டேயுள்ளது. படியைத் தாண்டி கோவிலுக்குள் செல்பவரின் கால்களை அந்தத் தண்ணீர் கழுவிக்கொண்டிருப்பதுடன், அந்த இடமும் எப்போதும் சுத்தமாகவுள்ளது. நல்லூர் முதலிய கோவில்களிலும் பூஜாகாலங்களில் இவ்விதம் செய்யலாம்.

• • •

நாங்கள் அங்கு செல்லும்போது நீண்ட கியூவரிசைகள் விசுவரூப தரிசனத்துக்காகக் காத்திருந்ததைக் கண்டேன், நேரமாகிவிட்டதால் கியூவில் காத்திருந்தும் பலருக்கு அந்த தரிசனம் கிடைக்க முடியாமற் போனதைக் கண்டேன்.

18 ரூபாய்க்கு டிக்கெட் எடுக்கவும் கியூவரிசை, 8 மணிக்குத்தான் டிக்கெட் கொடுக்க ஆரம்பித்தனர். டிக்கெட் வாங்கியபின், மீண்டும் உள்கோவிலுக்குச் செல்ல அங்கும் கியூ வரிசை. கியூவில் காத்திருக்கையில், பல குரங்குகளும்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "வடவியட்னமில் அமெரிக்க தாக்குதல் நிற்கவேண்டும்"

## இந்தோ - ரஷ்ய தலைவர்கள் கூட்டறிக்கை

### லால்பகதூர் சாஸ்திரி டில்லி திரும்பினார்

புதுடில்லி, மே 20

சோவியத் யூனியனில் சோவியத் அரசாங்க விஜயத்தை முடித்துக் கொண்டு இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி இன்று அதிகாலை 2-30க்கு புதுடில்லி திரும்பினார்.

ரஷ்யத் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சு கூட்டறிக்கையில் இடம்பெற்றிருப்பதாயும், அறிக்கையில் சில விஷயங்கள் இருப்பதாயும், றும் கூட்டறிக்கையில் இடம் பெறாத முக்கிய விஷயங்களும் உண்டு என்றும் நிருபர்களிடம் அவர் கூறினார். இந்தியா விஷயமாக ரஷ்யா பரிவும், ஆதரவும், நட்புணர்ச்சியும் கொண்டிருப்பதாக திரு. சாஸ்திரி அறிவித்தார்.

4-ம் ஐந்தாண்டுத் திட்டத்துக்கு ரஷ்யா நல்ல அளவில் உதவிபுரியும் என்றும், இன்னும் ஐந்தாண்டுக்குள் இரு நாட்டு வர்த்தகத்தையும் இரட்டிப்பாக்க ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

கட்ச் பிரிட்டன் விஷயமாக முயற்சி மேற்கொண்டு வருவது ரஷ்யத் தலைவர்களுக்குத் தெரியுமாதலால் கூட்டறிக்கையில் இதுபற்றுக் குறிப்பிடவில்லை என்றார் சாஸ்திரி. பாரதம் மீதான சீனாவின் போக்கு குறித்து ரஷ்யத் தலைவர்களுடன் முழு அளவு பேச்சுகள் நடைபெற்றதென்றும் சாஸ்திரி கூறினார்.

எவ்வித எல்லைத் தகராறுகளையும் சமாதானப் பேச்சு மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் படை பல உபயோகத்தை அனுமதிக்கக் கூடாது என்றும் சாஸ்திரி-கோஸிஜின் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மண்டலசார்பற்ற கொள்கைக்கு சர்வதேச அங்கீகாரம் வளர்ந்து வருகிறது என்றும் அதில் நம்பிக்கை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. வடவியட்னமில் அமெரிக்க விமானத் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் இரு தலைவர்களும் கூட்டறிக்கையில் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## அமெரிக்க சாதனை

கேப்கென்னடி, மே 20

அமெரிக்கா ஒரே ராக்கெட் மூலம் 8 கிரகங்களை வான வெளிக்கு அனுப்பியிருக்கிறது.

---

## தென்வியட்னமுக்கு போரிடும் ராணுவம்

### அமெரிக்கா அனுப்பும்

வாஷிங்டன், மே 20

தென் வியட்னமுக்கு தாக்குதல் படைகளை அனுப்புவது குறித்து இப்போது அமெரிக்கா தீவிரமாக ஆலோசித்து வருகிறது என அறிவிக்கப்படுகிறது.

நேற்று தென்வியட்னம் விமானங்கள் வியட்காங் இலக்குகளைத் தாக்கியதில் 85 வியட்காங்கியர் கொல்லப்பட்டனர்.

---

## டோக்கியோவில் சுபந்திரியோ

டோக்கியோ, மே 20

இந்தோனேஷிய வெளிநாட்டுமந்திரி டாக்டர் சுபந்திரியோ மலேஷியா பற்றிப் பேசுமுகமாக டோக்கியோ வந்தார்.

## 3 ரஷ்ய தலைவர்கள் இந்தியா வருவர்

புதுடில்லி, மே 20

சோவியத ஜனாதிபதி மிக்கோயன், பிரதமர் கோஸிஜின், கம்யூனிஸ்ட் கட்சியின் முதலாவது காரியதரிசி திரு. பிரஷ்னேவ் ஆகிய ரஷ்யத் தலைவர்களைத் தாம் இந்தியா வருமாறு அழைத்திருப்பதாயும், மூவரும் அழைப்பை ஏற்றுக்கொண்டுவிட்டதாயும் திரு. சாஸ்திரி கூறினார்.

## ஆயுதக் கடத்தல்காரர் கைது

நைரோபி மே 20

உகண்டா, தன்ஸினியா ஆகிய இடங்களிலிருந்து ஆயுதங்களை கொண்டுவர முயன்றதாக 47 பேரை கென்யா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

---

## டிகாலின் சமபல யோசனை

பாரிஸ், மே 20

உலகில் புதிய ஓர் சமபல நிலையை ஏற்படுத்த வேண்டும் என பிரெஞ்சு அதிபர் டிகால் கூறியிருக்கிறார்.

---

## மகாராணிக்கு பெரும் வரவேற்பு

பொன், மே 20

ஜெர்மனிக்கு விஜயம் செய்திருக்கும் பிரிட்டிஷ் மகாராணிக்கு நேற்று 5 லட்சம் பொன் மக்கள் மகத்தான வரவேற்பளித்தனர்.

---

## ராணுவ பகுதிகளை அயூப்கான் பார்வையிடுகிறார்

காரச்சி, மே 20

பாகிஸ்தான் ஜனாதிபதி தனது ராணுவ, விமானப் படைத் தளபதிகள், இதர உயர் ராணுவ அதிகாரிகள் ஆகியோருடன் எல்லையிலுள்ள தமது படைகளைத் தொடர்ந்து பார்வையிட்டுவருகிறார். இந்தியா தாக்கினால் இந்தியர்களுக்கு நல்ல பாடம் படித்துக்கொடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்கள்.

## டொமினிக்கனில் நிலைமை மோசமடைகிறது

### சண்டையை நிறுத்துமாறு பாதுகாப்பு சபை கோரிக்கை

நியூயோர்க், மே 20

டொமினிக்கன் குடியரசில் நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது என ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட் தெரிவித்திருக்கிறார்.

அங்கு ஐ. நா. தலையீடு வதை உடன்நிறுத்த வேண்டும் என வாஷிங்டன் திரும்பியுள்ள அமெரிக்க ராஜ்யங்களின் ஸ்தாபன சமாதான தூதுகோஷ்டி கோரியிருக்கிறது.

டொமினிக்கன் குடியரசு பற்றி ஜனாதிபதி ஜோன்ஸன் நேற்றிரவு தமது உயர்தர ஆலோசகர்களுடன் கலந்து பேசினார்.

அதேசமயம் டொமினிக்கன் குடியரசில் உடன் சண்டையை தற்காலிகமாக நிறுத்துமாறு சம்பந்தப்பட்ட கட்சிகளை ஐ. நா. பாதுகாப்புசபை கேட்டுக் கொண்டிருக்கிறது. காயமடைந்தவர்களை வெளியேற்ற செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உதவியளிக்கும்முறையில் இவ்வாறு அது கேட்டுக்கொண்டிருக்கிறது.

ரஷ்யப் பிரதிநிதி இக்கூட்டத்தில் பேசியபோது டொமினிக்கனிலிருந்து அமெரிக்க துருப்புகளை உடனடியாக வெளியேறும்படி சபை கேட்க வேண்டும் எனக் கூறினார்.

## வடவியட்னமில் ரேடியோ நிலையமும் ராணுவத் தளமும் நாசம்

### அமெரிக்க விமானங்கள் குண்டுமாரி

சைகோன், மே 20

வடவியட்னம் மீது நேற்று 40 அமெரிக்க போர் வெடி விமானங்கள் தாக்குதல்கள் நடத்தின. அவைகளுடன் 10 ஜெட் விமானங்களும் சென்றது.

இதன்விளைவாக ஒரு இராணுவத்தளமும், ரயில் பாதைகளும் ஒரு ரேடியோ நிலையமும் தீக்கிரையாகியதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த விமானங்கள் பின்பு விமானந்தாங்கிக் கப்பலுக்குத் திரும்பின. இத்தாக்குதல் குறித்து வடவியட்னம் சர்வதேச கண்காணிப்புக் கமிஷனுக்குப் புகார் செய்துள்ளது.

தென்வியட்னமுக்கு ஆஸ்திரேலியா துருப்புக்களை அனுப்புவது குறித்து ரஷ்யா ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது. இது ஜெனிவா ஒப்பந்தத்துக்கு முரணான செயல் என அது கூறியிருக்கிறது.

அதே சமயம் லாவோஸ், வடவியட்னம் மீது தாக்குதல் நடத்த அமெரிக்க விமானங்களுக்கு தாய்லாந்து தளம் அமைப்பது குறித்து ரஷ்யா எச்சரிக்கைசெய்திருக்கிறது.

## வங்காளப்படத்துக்கு ராஷ்டிரபதி பதக்கம்

புதுடில்லி, மே 20

அகில இந்திய முழுநீளப் படத்துக்கான ராஷ்டிரபதி பதக்கத்தை வங்காளப்படமான சாரன்லதா பெற்றுள்ளது. இப்படத்தைத் தயாரித்தவருக்கு ரூபா 20,000 ரொக்கப்பரிசும், இதன் டைரக்டருக்கு ரூபா 5,000 ரொக்கப்பரிசும் வழங்கப்படும். இவ்வரிசையில் இரண்டாவது இடத்தை ஒரு ஹிந்திப்படமும், மூன்றாவது இடத்தை தமிழ்நாட்டு எழுத்தாளர் ஜெயகாந்தன் எழுதித்தயாரித்து டைரக்ட் செய்த உன்னைப்போல் ஒருவனும் பெற்றுள்ளன. இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற படங்களுக்கு ராஷ்டிரபதி தராதரப் பத்திரம் வழங்கப்படும்.

தமிழ்ப்படங்களுக்கான வரிசையில் 'கைகொடுத்த தெய்வத்'துக்குவெள்ளிப் பதக்கமும் இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கான தகுதிப் பத்திரங்களை 'பழனி' 'சர்வர் சுந்தரம்' ஆகிய படங்களும் பெற்றுள்ளன.

# 13,000 பேருக்கு மேல் மாண்டதாக தகவல்

## கிழக்கு பாகிஸ்தான் புயல் எதிரொலி

டாக்கா, மே 20

கிழக்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட புயல் காரணமாக 13,000க்கு மேற்பட்டோர் மாண்டிருப்பதாக உத்தியோக ரீதியில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நிவாரண உதவிக்காக 8 கோடி ரூபாய் செலவிடத் திட்டமிட்டிருப்பதாய் கிழக்கு பாகிஸ்தான் கவர்னர் திரு அப்துல் மூனிம்கான் கூறினார்.

பரிஸாலில் மட்டும் 11,000 பேர் மாண்டதாக கவர்னர் தெரிவித்தார்.

கிழக்கு பாகிஸ்தானின் நிலைமையை மதிப்பிடும் பொருட்டு ஜெனிவாவிலிருந்து சர்வதேச செஞ்சிலுவையைச் சங்க தூதுகோஷ்டிகள் இரண்டு டாக்கா வந்திருக்கின்றன.

ஐக்கிய அராபியக் குடியரசும் நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது.

இந்திய ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் கிழக்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட உயிர், பொருள் நஷ்டம் குறித்து தமது அனுதாபத்தை ஜனாதிபதி அயூப்கானுக்குத் தெரிவித்திருக்கிறார்.

# 'அப்துல்லாவை உடன் விடுதலைசெய்க'

## கராச்சியில் மாபெரும் கூட்டம்

கராச்சி, மே 20

ஷேக்அப்துல்லா கைது செய்யப்பட்டதை எதிர்த்து நேற்று கராச்சியில் நடைபெற்ற பிரமாண்டமான பொதுக் கூட்டத்திற்கு ஆஸாத் காஷ்மீர் தலைவர் தலைமை வகித்தார்.

அப்துல்லா கைதுசெய்யப்பட்டதுபற்றியும் காஷ்மீரில் இந்தியத் துருப்புகள் ஈவிரக்கமின்றி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் பெரிய ராணுவபலத்தைக் கண்டு தாங்கள் அஞ்சவில்லை என்றும் சிறந்த வீரர்கள் தங்களிடம் இருக்கிறார்கள் என்றும் ஆஸாத் காஷ்மீர் தலைவர் அப்போது கூறினார்.

அப்துல்லாவை உடனடியாக விடுதலை செய்யுமாறும் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# 'கொலைகாரர்களுடன் சேர்த்து அடைக்கவில்லை'

## பிரிட்டிஷ் நிருபரின் கூற்றுக்கு சென்னை அதிகாரி மறுப்பு

கோவை, மே 20

கோவை மத்திய சிறையில் 7 கொலைகாரர்கள், 3 கொள்ளைக்காரர்கள் ஆகியோருடன் ஒரே அறையில்தான் அடைக்கப்பட்டிருந்ததாக உதகமண்டலத்தில் ஷேக்அப்துல்லாவைச் சந்தித்த பிரிட்டிஷ் நிருபர் டொம் ஸ்டேஸி லண்டனில் கூறியிருப்பது முற்றிலும் பொய் என்றும், முழு அபத்தம் என்றும் சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்த ஓர் பெரிய அதிகாரி கூறினார்.

குழந்தைப்பிராயத்தில் இருந்தே தமக்குத் தனியாக பயப்பிராந்தி இருந்துவந்ததாகவும், சிறையில் தனியாக அடைத்துவைத்தால் தமக்கு ஜுரம் வந்துவிடும் என்றும் சிறை அதிகாரிகளிடம் அவர் தெரிவித்துக்கொண்டார். எனவே சிறைச்சாலைக்குள் இருந்த ஆஸ்பத்திரியில் அவர் வைக்கப்பட்டிருந்தார். பின் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் ஆஸ்பத்திரியில் விசேஷ முறையில் வைக்கப்பட்டிருந்தார். சிறைச்சாலை டாக்டர் ஒருவரும், இரு பணியாட்களும் அவரை நேரடியாகக் கவனித்துவந்தனர்.

தமக்கு கொடுக்கப்பட்ட உணவும், தம்மிடம் நடந்து கொண்டவிதமும் நல்லமுறையில் இருந்ததாக திரு. ஸ்டேஸி அவரைப் பரிசோதித்த சிறைச்சாலை டாக்டர் டிட்டனிடம் தெரிவித்ததாக, அந்த டாக்டரே கூறினார்.

அங்கிருந்த 4 நாட்களும் அவருக்கு ஐரோப்பிய உணவு அளிக்கப்பட்டது.

# இந்திய - பாகிஸ்தான் எல்லையில் பல தொல்லைகள்

புதுடில்லி மே 20

கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் தகாகிராம் பகுதியில் பாகிஸ்தான் துருப்புக்களை குவித்திருப்பது பற்றி இந்தியா ஆட்சேபனை தெரிவித்திருப்பதுடன் உடன் அவற்றை விலக்கி கொள்ளுமாறும் கேட்டிருக்கிறது.

இந்தியா இப்பகுதியில் துருப்புக்களை குவித்திருப்பதாய் பாகிஸ்தான் கூறுவது ஆதாரமற்றது என்றும் ஆட்சேபனைக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது.

ராஜஸ்தானில் இந்திய வான்பகுதிமீது பாகிஸ்தானி விமானம் ஒன்று மற்றொரு அத்துமீறலை நடத்திருப்பதாம், இத்தகைய செயலை உடன்நிறுத்துமாறும் மேலும் கோரப்பட்டிருக்கிறது.

ஜம்முவில் இந்தியரோந்து கோஷ்டியொன்றுடன் ஊடுருவிவந்த 40 பாக். ஆயுதபாணிகள் கைகலந்தனர் என்றும் இதனால் 4 பாகிஸ்தானியர் மாண்டனர் என்றும் அறிவிக்கப்படுகிறது.

சாம் பகுதியிலும், பூஞ்ச் பகுதியிலும் இருதரப்பாருக்குமிடையே ஆயுதக் கைகலப்பு

(4-ம் பக்கம் பார்க்க)

## உலகில் சிறந்த உளவு முறை

நியூயோர்க், மே 19

உலகிலேயே சிறந்த உளவறியும் முறை ஒன்றை ரஷ்யா அமெரிக்காவில் ஏற்படுத்தியிருக்கிறது என அமெரிக்க உளவிலாகா டைரக்டர் திரு. எட்கர் ஹூவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிர்ச்செய்கையை பார்வையிட்டனர்

வவுனியா, வியா

மட்டக்களப்பு விவசாயப் பகுதியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் உற்பத்தியைக் கூட்டும்நோக்கமாக நேற்று வவுனியாவுக்கு ஒரு கோஷ்டியாக வந்து வவுனியாவில் உற்பத்திசெய்யப்பட்ட பயிர்வகைகளைப் பார்வையிட்டனர்.

வவுனியாவில் ஓங்கி வளர்ந்து பழங்களுடன் காட்சியளிக்கும் கொடிமுந்திரிகை, பம்பாய்வெங்காயம், மிளகாய், மிலக்கட்டலை ஆகியவற்றைப் பார்வையிட்டனர்

இக் கோஷ்டிக்கு வவுனியா விவசாயப்பகுதியில் கடமையாற்றும் பிரதம விவசாயப் போதனாசிரியர் திரு. காராளசிங்கம் சகல இடங்களையும் காண்பித்தார்.

---

## இந்தியா . . .

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டதென்றும், இதில் 15 பாகிஸ்தானியர் கொல்லப்பட்டனர் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

திரிபுராவிலுள்ள பெலோனியா நகர் மீது கடந்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் பாகிஸ்தானியர் சுமார் 5000 ரவுண்டுகளுக்குமேல் சுட்டனர்.

சோனமுரா சப் டிவிஷனில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தானியர் ஊடுருவினர் என்றும், திருப்பிச்சுட்டதில் ஒருவர் கொல்லப்பட்டதாயும் மேலும் கூறப்பட்டது.

அஸ்ஸாம் எல்லையில் லத்திலா—துமாபாரி பகுதியில் 2000 ரவுண்டுகள் பாகிஸ்தானியர் சுட்டனர்.

REGAL - JAFFNA
NOW SHOWING
The Show of Shows!!
THE
NAKED WORLD
(Eastman Color)

## உணவு உற்பத்தி

வவுனியா, வியா

"தேவைக்கு உரிய உணவுப் பொருட்களை நீங்களே உற்பத்தி செய்யவேண்டும் வெளிநாட்டில் இருந்து நமது இலங்கைக்கு வரும் வெண்காயம், கிழங்கு, மிளகாய், மிலக்கட்லை போன்றவைகளை அறவே நீக்க வேண்டும் இதற்கு வேண்டிய சகல ஆயத்தங்களையும் நல்ல விதைகளை நேர்மையாமல் தடுப்பதற்கான முறைகளையும் செய்வதற்கு நாம் தயாராயுள்ளோம், உங்களின் உதவியால் வெளிநாட்டுக்கு கிழங்கு, மிளகாய், பம்பாய் வெண்காயம் போன்றவை ஏற்றுமதி செய்ய வேண்டும்" என்று பூவரசங்குளத்தில் நடைபெற்ற விவசாய விஸ்தரிப்பு கூட்டத்தில் வவுனியா விவசாய போதனாசிரியர் திரு வி நடராசா பேசும் போது கூறினர்

அவர் தொடர்ந்து கூறியதாவது:

தற்பொழுது மிளகாய், பம்பாய்வெங்காயம் ஆகியவற்றை அரசாங்கம் உத்தரவாதவிலைத் திட்டத்தில் வாங்குவதால் உங்களுக்கு அதிகஷ்டம் இருக்காது. அத்துடன் கூடிய விலைக்கும் விற்க முடியும் அதுமட்டுமல்லாமல் தரகர் தொல்லையும் நீங்கிவிடும்".

உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் திரு ஜெயராசா மற்றும் பலரும் பேசினர்கள்.

---

## சன சமூக நிலைய திறப்பு விழா

யாழ்ப்பாணம், வெள்ளி


சென்ற வெள்ளி கிழமை மாலை மண்டைதீவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மதியொளி சன சமூக நிலையத்தை தீவுப்பகுதி எம். பி திரு வி நவரத்தினம் திறந்து வைத்தார்

இந்த வைபவத்துக்கு 8-ம் வட்டார அங்கத்தவர் திரு குலசிங்கநாதன் தலைமைதாங்கினார் திரு சி பாலசிங்கம், திரு வே ராஜரத்தினம் உட்படப்பலர் உரை நிகழ்த்தினர்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நியூ (கும்பனித்தெரு)
ஷீபா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்) தீவொலி (நுவரெலியா)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

தினசரி பிற்பகல் 2-30, 6-30, 9-30



★ சிவாஜி கணேசன்
★ எஸ். எஸ். ராஜேந்திரன்
★ விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
பச்சை விளக்கு

## 55 வயதில் கட்டாய ஓய்வு

பம்பலப்பிட்டி, வியாழன்

அரசாங்க ஊழியர்களுக்கு 55 வயதானதும் கட்டாய ஓய்வு வழங்கும் முறை இனிமேல் கண்டிப்பாக அமுல் நடத்தப்படும்.

தற்போது இலாகா தலைவர்களின் சிபார்சின் பேரில் 55 வயதுக்குப்பின்னரும் சில ஊழியர்கள் 60 வயது வரை சேவைசெய்ய அனுமதிக்கப் படுகிறார்கள்.

55 வயதுக்குப் பின்னர் அநேகமான ஊழியர்கள் சேவைசெய்ய தகுதியற்ற நிலையிலிருப்பதாலும் 55 வயதில் ஓய்வு பெறுவதால் மற்றவர்களுக்கு இதனால் வேலைவாய்ப்பு வசதிகளேற்பட்டு வேலையில்லாத்திண்டாட்டப் பிரச்னை ஓரளவு தீரவழி செய்வதாக இருக்குமெனக் கருதப்படுவதாலுமே நிதி அமைச்சு மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

---

## ஒற்றுக் கேட்டால் தண்டனை

கொழும்பு, வியாழன்

இருவருக்கிடையில் நடைபெறும் டெலிபோன் பேச்சுக்களை, இரகசியமாக கேட்டு, அப்பேச்சு விபரங்களை மறு பேருக்கு தெரிவிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இப்படியான குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டவருக்கு 100 ரூபா முதல் 500 ரூபா வரை அபராதமும் ஆறுமாதம் முதல் 3 வருடங்கள் வரை சிறந்த தண்டனையும் விதிக்கப்படுமென அறியப்படுகிறது.

---

## சனசமூக நிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

அரியாலை ஜனசமூக நிலையத்தின் 16-வது ஆண்டு விழாவை அடுத்தமாதம் 18-ம் திகதி நடாத்துவதென மேற்படி நிலையக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு ஒரு கலைவிழாவும் நடைபெறவிருக்கிறது,

---

## புதல்வனின் நோயால் தாய் தற்கொலை

பனை, வியாழன்

உடுத்துறையைச் சேர்ந்தவரும் ஏழு பிள்ளைகளின் தாயாருமாகிய 42 வயதுள்ள முதலித்தம்பி சிவபாக்கியம் என்பவர் தனது மகனது நோயின் வேதனையைச் சகிக்கமுடியாத காரணத்தினால் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

விசாரணையின்போது காலம் சென்றவரின் மகனுன 23வயது சிரஸ்பிய தங்கராசா என்பவர் கடந்த ஏழு வருடங்களாக வலியினால் பீடிக்கப்பட்டிருந்தாரென்றும், அடிக்கடி இந்நோய் உக்கிரமாக அவரை வருத்திவந்ததாகவும் இதனை சகிக்கமுடியாத காரணத்தால் தற்கொலை செய்திருக்கலாமெனவும் காலஞ்சென்றவரின் மகன், கணவன், தகப்பன் ஆகியோர் சாட்சியமளிக்கையில் தெரிவித்தனர்.

மரணவிசாரணை அதிகாரி திரு கே. எஸ். இராசையா மரணவிசாரணையின்போது தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

---

## லண்டனில் கென்னடி சிலை

லண்டன்; மே 20

லண்டனிலுள்ள ஒரு சர்வதேச மாணவர் விடுதியில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் உருவச்சிலையை அவருடைய சகோதரர்களான ராபர்ட் கென்னடியும், எட்வர்ட் கென்னடியும் திறந்துவைத்தார்கள்.

## "சம்பந்தரின் ஒழுக்கத்தை சைவக் குழந்தைகள் பின்பற்றவேண்டும்"

உடுப்பிட்டி, வியாழன்

"இக்காலத்தில் பெரியவர்களிடையே சமயபக்தி மிகவும் குன்றிவருகிறது. கோயில் வழிபாடு செய்பவர்கள் வரவரக் குறைந்து வருகிறார்கள். பண்டைய நாட்களில் தமிழ் மக்கள் திருவிழாக் காலங்களில் மாத்திரம் ஆலயத்திற்குச் செல்லுவதில்லை. தினமும் அவர்கள் சென்று தொழுதார்கள். பண்டைய சிவனடியார்களின் சரித்திரங்களும் சமயகுரவர்களின் வரலாறும் நமக்கு சைவத்தின் புனிதத்தையும் அதன் மகிமையையும் எடுத்துக் கூறுகின்றன"

இவ்வாறு பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை நெல்லியடி அறநெறிக்கழகத்தின் சார்பில் நெல்லியடி தட்டங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலயத்தில் நடைபெற்ற 'திருஞானசம்பந்தர் குருபூசை விழாவில் சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் கூறினர். அவர் தொடர்ந்து கூறியதாவது:- சிவபெருமானுடைய பாதங்களைத் தமது இருதயத்திலே வைத்து வழிபடுபவர் என்றகாரணத்தினாலேயே திருஞானசம்பந்தரின் அருமைத்தகப்பனார் "சிவ பாதவிருதயர்" என்று அழைக்கப்பட்டார். அவர் இறைவனிடத்தில் தூயபக்தி கொண்டிருந்தார். மூன்று வயதிலே ஞானப்பாலை உண்டு "தோடுடைய செவியன்... பாடிய சம்பந்தரின் ஒழுக்கத்தை இக்காலச்சைவக் குழந்தைகளும் கடைப்பிடித்து முன்னேறவேண்டும்.

விழாவிற்குத் தலைமைவகித்த அல்வாய் அம்பாள் அரசினர் சைவவித்தியாசாலை அதிபர் திரு க. கந்தப்பு பேசுகையில்: குழந்தைகளின் பிஞ்சு உள்ளங்களிலே தான் பக்தி என்ற விதையைத் தூவவேண்டுமென்றும் இதற்கு பெற்றோர்கள் உறுதுணையாய் இருக்கவேண்டுமென்றும் கூறினர்.

ஆசிரியர் திரு விநாயகமூர்த்தி பேசுகையில்: "பாடசாலைகளில் சமயக் கல்வியின் தரம் மிகவும் குன்றிவிட்டதென்றும் மாணவர்களுக்குச்சமயப் பற்று ஏற்படக் கூடியவிதத்தில் ஆசிரியர்கள் பலர் போதிப்பதில்லையெனவும் கூறினர்.

நெல்லை அறநெறிக்கழகச் செயலாளர் திரு வெ. முருகேசு நன்றி தெரிவித்துப் பேசுகையில். "இளைஞர்களின் கையில்தான் 'ஓர் இனத்தின் அரசியல்' சமய வரலாறுகள் தங்கியுள்ளனவென்ருர்.

ஃ ஃ ஃ

**கிளிநொச்சியில்....**

ஜெயந்திநகர் ஸ்ரீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தில் ஆலய பரிபாலன சபையாராலும் அக்கிராம பொதுமக்களாலும் திருஞானசம்பந்தர் குருபூசை கொண்டாடப் பட்டது பின்வருவோர் இவ்வருட உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு வ. சிவபாதம் உபதலைவர்-திரு வை. கு. தம்பிப்பிள்ளை காரியதரிசி- திரு அ. துரைராசா உபகாரியதரிசி- திரு சி. அருணாசலம் தனாதிகாரி- திரு சி. சின்னக்கண்ணு

ஃ ஃ ஃ

**சங்கத்தானையில்...**

சங்கத்தானை இந்துவாலிப சங்க ஆதரவில் டாக்டர் க. செல்வத்துரையின் உபயமாக சங்கத்தலைவர் க. பஞ்சலிங்கம் தலைமையின்கீழ் திருஞானசம்பந்தர் குருபூசை ஊர்வலத்துடன் மிகச் சிறப்பாக மாதர் சங்கக் கட்டடத்தில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஆசிரியர் அ. சிவசுப்பிரமணியமும் க. வயிரவநாதரும் மாதர் சங்க அங்கத்தவர் செல்வி ச. கனகேஸ்வரியும் சொற்பொழிவாற்றினர்கள். சங்கக் காரியதரிசி செல்வன் செ. கணேசலிங்கம் நன்றி கூறினர்.

**ஊரெழுவில்**

"இன்றைய சூழ்நிலையில் நம் சமயம் மேலும் மேன்மையுற்று விளங்கவேண்டுமேயானால் வாலிபர்களிடையில் சமய ஊக்கம் ஏற்படவேண்டுமென்று ஊரெழு சிஷ்ய பரிபாலன மண்டபத்தில் ஞானசம்பந்தர் குருபூசையை முன்னிட்டு நடைபெற்ற கூட்டத்தில் பா. வைத்தியநாதக்குருக்கள் குறிப்பிட்டார்.

"பலசமயங்களால் நம்சமயம் நசுக்கப்படும் நேரத்தில் இறைவனின் அவதாரபுருஷர்களாக நாயன்மார்கள் தோன்றி அவ்வப்போது நம் சமயத்தின் தத்துவங்களையும், அதனால் நாம் பெறும் பெறுபேறுகளையும் அரிய பல அற்புதங்கள் வாயிலாக உறுதிப்படுத்தி நம் சமயத்தை வளம்பெறச் செய்தது மாத்திர மன்றி மெய்ச் சமயமும் இதுவே என நிரூபித்தார்கள் அவ்வரிசையில் ஞானசம்பந்தப்பெருமானும் ஒருவராவர்" என்றும் அவர் மேலும் கூறினர்.

**வயாவிளானில்**

வயாவிளான் — பலாலி தெற்கு இந்துசமய விருத்திச் சங்கத்தின் சார்பில், மாணம்பராய்ப்பிள்ளையார் கோவிலில் திருஞானசம்பந்தர் குருபூசை விழா நடைபெற்றது ஆசிரியர் திரு. க. க. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. சி. சிவஞானம் உரைநிகழ்த்தினர்.

---

## 35 பாகிஸ்தான் வீரர் பலி

புதுடில்லி, மே 20

பாகிஸ்தான் துருப்புக்களுக்கும் பக்தூனிஸ்தான் தேசிய விடுதலைவீரர்களுக்குமிடையேபல கைகலப்புக்கள் நடைபெற்றிருப்பதாயும், ஒரு தாக்குதலின் போது 35 பாகிஸ்தான் துருப்புக்கள் கொல்லப்பட்டதாயும் இங்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

---

## முஸ்லிம்களின் வழிபாட்டுக்கு ஓய்வு

கொழும்பு, வியாழன்

முஸ்லிம் அரசாங்க ஊழியர்களுக்கு, இனிமேல் வெள்ளிக்கிழமைகளில் அவர்களது மதவழிபாட்டுக்காக இருமணித்தியாலங்கள் லீவு வழங்கப்படும்.

உள்நாட்டு அமைச்சர் டாக்டர் டபிள்யூ தகநாயக்காமேற்படி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

---

## சாஸ்திரிக்கு வீரப் பதக்கம்

லெனின்கிராட், மே 20

ஹிட்லரின் படைகளை எதிர்த்துநின்ற இரண்டாவதுஉலக யுத்தவீரர்களுக்கு வீரப்பதக்கங்கள் இங்கு சூட்டப்பட்டபோது, இந்தியப் பிரதமர் சாஸ்திரிக்கும் இவ்வீரபதக்கம் சூட்டப்பட்டது. அப்போது யுத்த வீரர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டனர்.

இரண்டாவது யுத்த காலத்தில் மகாத்மா காந்தியின் ஆணைக்குட்பட்டு சாஸ்திரி, யுத்தமறுப்பு சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார்.

---

## கி. மு. சங்க கிணறு

பருத்தித்துறை, வியாழன்

கப்புது அந்தணன் திடல் கிராம முன்னேற்றச் சங்கம் பொதுமக்களின் குடிநீர்ப்பிரச்னையைத் தீர்க்குமுகமாக அரசாங்க உதவியுடன் கிணறு ஒன்றைக் கட்டிமுடித்துள்ளது.

அரசாங்கம் 700 ரூபாய் மட்டும் வழங்கியபோதிலும் கிராம மக்கள் தமது சுயமுயற்சியால் கல்லுமுறையில் கட்டி முடித்தமை பாராட்டக்கூடியதென அதிகாரிகள் தெரிவித்தனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரயாணிகள் கஷ்டம்

நெடுந்தீவு, வியா

நெடுந்தீவில் பிரயாணிகள் தங்கும் மடம் அண்மையில் வீசிய சூறாவளியினால் பாதிக்கப்பட்டு, அதன் கூரையும் காற்றோடு சென்றுவிட்டது.

இம்மடம் திருத்தப்படாததால் பிரயாணிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

---

## டிராக்டர்-லொறி விபத்து

பளை, வியாழன்

மண்டைதீவைச் சேர்ந்த நாகலிங்கம் வெற்றிவேலு என்பவரது டிராக்டர் மண்டைதீவிலிருந்து வவனிக்குளம் சென்று கொண்டிருக்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து நீர்கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்த லொறியுடன் மோதுண்டு பெரும் விபத்துக்குள்ளாகியது. டிராக்டரும், லொறியும் பெரும் விபத்துக்குள்ளாகிய நிலையில் உள்ளன. டிராக்டர் சாரதி தலைமறைவாக இருந்து வருகின்றார். இது குறித்து பளைப் பொலிசார் பலன் விசாரணை நடாத்திவருகின்றனர்.

---

## "சூழ்நிலையை கெடுக்கவேண்டாம்"

உடுப்பிட்டி, வியாழன்

"1957 ல் உருவான பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தை முறியடிக்கத்தக்க சூழ்நிலையை உண்டாக்கியது. தமிழ் காங்கிரஸ் தலைமைப்பீடம். அவ்விதமான நிலையை உண்டாக்கக் கூடிய விதத்தில் இப்போதும் அவர்கள் பேசுவது கவலையளிக்கிறது." என்று உடுப்பிட்டித் தொகுதி தமிழரசுப் பிரமுகர் திரு. க. ஜெயக்கொடி உடுப்பிட்டித் தமிழரசு மாவட்ட சபைக்கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர். அவர் தொடர்ந்து கூறுவதாவது:-

இழந்த உரிமைகளைப் பெறத்தக்க சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் போது பலவிதமான வேறுபட்ட கருத்துக்களை கூறுவதால் தமிழ் மக்களிடையே ஒற்றுமையில்லை] என்று சிங்கள மக்கள் விளங்கக்கூடும் பண்டா-செல்வா ஒப்பந்தம் மூலம் ஆடி அமாவாசைத்தினத்திலே தமிழர்களின் உரிமைகளைத் தாரை வார்த்துச் சிங்களவர்களுக்குத் தத்தம் பண்ணிக் கொடுத்து விட்டார்கள் என்று அன்று பேசியவர்கள் அதேபாணியில் இன்னும் பேசத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

கூட்டத்தில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

---

கராச்சி, மே 20

பாகிஸ்தானில் 17000 சதுர மைல் பிரதேசம் எண்ணை கண்டுபிடிப்புக்காக ஒதுக்கப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

---

## வானொலி நிகழ்ச்சிகள்

### வெள்ளி 21-5-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00.)

காலை 6-45 சாதாஞ்சலி 6-50 வசவகற்சிந்தனை, 6-55 இஸ்லாமியசுற்சிந்தனை, 7-00 பக்திப்பாடல்கள், 7-30 தோத்திரப்பாடல்கள் — (சைவ மங்கையர்கழக மாணவிகள், 8-00 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதம்.

பகல் 12 00 சித்திரகானம் 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-15 நாதசுரம்,

இரவு கிராமசஞ்சிகை, 6-15 ஞானாஞ்சலி, 7-15 கதாபிரசங்கம் (ஆர். வடிவேலு) 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-15 நாடகம், 8-45 இஸ்லாமிய கீதங்கள், 9-15 பேச்சு, 9-30 நேயர்விருப்பம், 10-00 கினாரினெட், 10-15 தேர்ந்தஇசை,

## போஸ்ட்மாஸ்டர் ஜெனரலின் திட்டம்

பம்பலப்பிட்டி, வியாழன்

தபால் தந்திச்சேவை திறமையாகவும் நல்லமுறையிலும் நடைபெறுவதற்கு போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் திரு. ஏ. எல். பெரேரா திட்டமிட்டுள்ளார்.

வேலைகளைப் பகிர்ந்து கொடுப்பதல் மேற்படி சேவை சீராக நடைபெறுமென போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் நம்புகிறார்.

திரு. பெரேராவின் திட்டப்படி ஒவ்வொரு பிரிவுக்கும விசேஷ அதிகாரிகள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். இவ்விதம் வேலைகளைப் பகிர்ந்து விசேஷ அதிகாரிகளின் கீழ் ஒவ்வொரு பிரிவும் இயங்குவதால் ஒவ்வொரு பிரிவில் எழும் பிரச்னைகள்பற்றியும் அவர்கள் விளக்கம்தரக்கூடியதாக இருக்குமென அவர் கருதுகிறார்.

## 23 புதிய தொழில் நுட்பக் கல்லூரிகள்

பம்பலப்பிட்டி, வியாழன்

தொழிற்கல்வி இலாகா 23 புதிய கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரிகளை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளது. இந்தக் கல்லூரிகளை நான்கு ஐந்து வருடங்களுக்குள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கல்லூரிகளைக் கட்டுவதற்கான ஆரம்ப வேலைகள் இந்தவருடத்தில் தொடங்கும் தொழிற்கல்விக் கமிஷனின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிபார்சுகளில் மேற்படி கல்லூரிகள் அமைப்பதுவும் ஒன்று.

தொழிற்கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கப்படவிருப்பதாகவும் இலாகா வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

---

## புதிய அரசாங்கத்துக்கு நாஸர் வாழ்த்து

பம்பலப்பிட்டி, வியாழன்

ஐக்கிய [illegible]யரசு திருடட்லி சேனநாயகவின் தலைமையில் அமைந்துள்ள தேசிய அரசாங்கத்துக்கு தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டதையிட்டு தமது பாராட்டைத் தெரிவித்துள்ளதோடு மண்டலசார்பற்ற கொள்கையைக் கடைப்பிடித்துவருவதில் தமது ஒத்துழைப்பைத் தருவதாகவும் தெரிவித்துள்ளார்.

---

## மீண்டும் பஸ் சேவை

பளை, வியாழன்

கடந்த ஆறு மாத காலமாகப் பளைக்கும் - யாழ்ப்பாணத்துக்கும் இடையில் அதிகாலை பஸ் சேவை நிறுத்தப்பட்டிருந்தது. இதுகுறித்து புலோப்பளைக் கிராமசபைத் தலைவர் திரு. ஏ ஜி. இராஜசூரியர் இ. போ. ச. அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதன்பயனாக இத்தாலை சேவை மீண்டும் இம்மாதமுதல் நடைபெற்றுவருகிறது.

---

## பொங்கல் விழா

பருத்தித்துறை, வியாழன்

புலோலி தெற்கு மந்திகை கண்ணகை அம்மன் ஆலயத்தில் வருடாந்த அம்மன் வேள்வி விழா இம்மாதம் 10-ந் திகதியன்று ஆரம்பமாகி நேற்றைய தினம நடைபெற்ற பொங்கல்விழாவுடன் முடிவடைந்தது.

---

## கடும் வரட்சி

நெடுந்தீவு, வியாழன்

கடும்வரட்சிகாரணமாக இங்கு கால்நடைகள் புல் பஞ்சத்தாலும் தண்ணீர்ப்பஞ்சத்தாலும் பாதிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து இவ்வரட்சி நீடிக்குமானல் கால்நடைகள் [illegible] கக்கூடும் [illegible]கிறது.

## ஐயாறன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வேடிக்கை விஷமங்கள் செய்வதைக் கண்டோம். மலைக்குச் செல்லும் போது பெண்கள் தலையில் பூவைத்துக்கொள்ள கூடாதாம். வைத்துக்கொண்டால் அங்குள்ள ஸ்வாமிக்கு தலைவலிக்குமாம். இதுதெரியாமல் ஒருபெண்மணி தலையில் பூவைத்துக்கொண்டிருந்தார். எங்கிருந்தோ ஒரு அனுமார் மெதுவாக வந்து அந்த பூவை பறித்துக் கொண்டு சென்றுவிட்டது! குரங்குகளுக்குள் இன்னும் எவ்வளவோ விஷய வேடிக்கைகள். மக்களை அக் குரங்குகள் வேறு எவ்வித உபத்திரவமும் செய்யவில்லை.

பின்னர் கியூவில் சென்று மகா மண்டபத்தில் அமர்ந்தோம். சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேல் இருக்கும். மூலஸ்தானத்துக்கு வழிபாடு நடக்கிறது. கோவிந்தா, கோவிந்தா பக்தி கோஷங்கள் எங்கும் எழுகின்றன. பிரார்த்தனைக்காக பல ஆண், பெண், குழந்தைகள் தலையை மொட்டையடித்துக் கொண்டிருந்தனர். மொட்டை அடிப்பது ஒரு தனி டிபார்ட்மெண்ட்!

பூசை முடிந்தபின் கியூவரிசை மூலம் அர்த்த மண்டபத்துக்குச் சென்று மூலவரை தரிசித்தோம். வெளியே துவார பாலகர்களின் முகத்திலுள்ள பெரிய நாமங்களின் இரு பாதங்களும் இரு கண்களையும் மறைக்கின்றன.

* * *

அங்கு ஒரு பெரிய உண்டியல். பலரும் வந்து பணம், நகை முதலியவற்றைப் பக்தியுடன் போடுக் கொண்டே உள்ளனர். பக்கத்திலே அதோ "சலசல"வென்று ஓசை கேட்கிறதே என்ன தெரியுமா? மழையல்ல. உண்டியல் காசுகளை சிறிது மலைபோல் குவித்து, அதை பலர் இருந்து சல்லடைகளில் சலித்து காசுகளைத் தரம்வாரியாகப் பிரிக்கின்றனர். பிரித்த காசுகளும் அதிகமாக இருப்பதால் எண்ணமுடியாது. அதனால்தராசிலேபோட்டு நிறுத்து தொகையைக் கணக்கிடுகிறார்கள். உண்டியலில் மஞ்சள் துணிகளில் கட்டியுள்ள வெள்ளி, தங்க நகைகளும் கிடைக்கின்றன. சிலர் தங்கள் தலைமுடிகளையும் காசுடன் போட்டிருந்தனர். தினசரி ஐம்பதாயிரம் ரூபாய்க்கு மேல் உண்டியல்பணம் மட்டும் சேருகிறதாம்! இதைத்தவிர தரிசன டிக்கெட் முதலிய வருமானங்கள். இந்தியாவிலேயே மிகவும் வருமானமுள்ளது இந்தக் கோயில் சுவாமிதானும். இப்பணத்தைக் கொண்டு ஒரு பெரிய சர்வகலாசாலை, இலவச வைத்தியசாலை முதலிய பல தர்மங்கள் நடக்கின்றன. கடவுளின் பெயரால் பணமல்ல. சமூக சேவைகள் நடப்பதைக் கண்டேன்.

* * *

வரும் பக்தகோடிகளை 'அஞ்சேல்' என்று அபயம் கொடுத்து ஆஜானுபாகுவாக மூலஸ்தானத்திலே ஸ்ரீவேங்கடேசப் பெருமான் மகிமையை சொல்லாமற் சொல்லிக்கொண்டிருக்கிறார். முன்காலத்தில் அங்கு இருந்தது முருகன் தானென்றும் பின்னர்தான் மாறுதல் ஏற்பட்டதென்றும் சிலர் கூறக்கேட்டேன். இது எப்படியாயினும் சைவர்களும், வைஷ்ணவர்களும் ஆயிரக்கணக்கில் தினசரி வந்து வழிபடுகிறார்கள். ஸ்ரீவேங்கடேசப் பெருமான், சைவ வைணவ ஒற்றுமை ஏற்படுத்தி வருகின்றார். அவர் ஆட்சி ஒரு பெரிய சாம்ராஜ்யமாகும்! அது தினே தினே வளர்ந்து கொண்டே வருகிறது.

* * *

அரவணையான் சிந்தித்தரற்றும்மடி
அருமறையான் சென்னிக
கணியாமடி
சரவணத்தான் கைதொழுது
[illegible]மடி
[illegible]ஞ்
[illegible]மடி

## "தமிழிலும் வழங்கவும்" — எஸ். ஜே. வி.

பம்பலப்பிட்டி, வியா

பிறப்புச்சாட்சிப் பத்திர விண்ணப்பப்பத்திரங்கள் தமிழில் வழங்கப்படவேண்டுமெனத் தமிழரசுக்கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் உள்நாட்டு மந்திரி டாக்டர் தகநாயக்காவைக் கேட்டுள்ளார்.

தமிழர் பெருந்தொகையாக வாழ்கின்ற சிலாபம், புத்தளம் போன்ற பகுதிகளில் இவ் விண்ணப்பபத்திரங்கள் தமிழில் வழங்கப்படவில்லையென தமிழரசுக்கட்சித்தலைவர் புகார் செய்துள்ளார். தமிழர் அதிக அளவு அங்கம் வகிக்கும் தொழிற்சங்கப் பதிவேடுகளில் தமிழுக்கும் இடமளிக்கும்படி தொழில்வீடமைப்பு அமைச்சரையும் அவர் கேட்டுள்ளார்.

---

## வட்டாரப் போட்டிகள்

வவனியா, வியா

வவனியா தமிழ் வட்டார உடற்பயிற்சிப்போட்டிகள் இம் மாதம் 29-ம் திகதி வவனியா தமிழ் மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் உடற்பயிற்சி வித்தியாதரிசி திரு வேதங்கராசா தலைமையின் கீழ் நடைபெறவிருக்கிறது. இதில் வவனியா வட்டாரப் பாடசாலைகள் பங்கு பற்றவிருக்கின்றன.

வவனியா சிங்கள வட்டாரப் போட்டிகள் 28-ம் திகதி பிற்பகல் வவனியா சிங்கள காமினி வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் உடற்பயிற்சி வித்தியாதரிசியின் தலைமையின் கீழ் நடைபெறும்.

---

## முந்திரிகைப்பருப்பு ஏற்றுமதி

பம்பலப்பிட்டி, வியா

உள்நாட்டு முந்திரிகைப்பருப்புகளில் வெளிநாடுகளின் கவனம் திரும்பியுள்ளது, இது பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பச்சையாகவும், துப்பரவாக்கப்பட்டும் உள்ள முந்திரிகைப்பருப்புக்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஜப்பான், இங்கிலாந்து போன்ற நாடுகளிலுள்ள ஹைக்கமிஷன் இலங்கை முந்திரிகைப்பருப்புகளை பார்வைக்கு வைக்கும்படி கேட்டுள்ளன. முந்திரிகைப் பருப்புகளை அதிகளவில் இறக்குமதி செய்யும் அமெரிக்காவும் இலங்கை முந்திரிகைப் பருப்புகளை அனுப்பும்படி கேட்டுள்ளது.

வர்த்தக டைரக்டர் வி. ஏ. ஜே. பி. செனரத் முந்திரிகைப பருப்புகளின் உற்பத்தியை அதிகரித்து உலகநாடுகளில் செல்வாக்கை ஏற்படுத்தும்படி உற்பத்தியாளர்களைக் கேட்டுள்ளார்.

---

## ஆறுகிரகச் . . :

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேற்றமுண்டு கருங்குளிரினால் சேதங்கள் ஏற்படலாம்.

கிழக்குநாடுகளில் அரசியல் கொந்தளிப்பும் உணவுப்பற்றாக்குறையும் தலையிடியைக் கொடுக்கும். எனினும் பலாத்காரத்தினால் பணியவைக்கும் முயற்சிகள் அதிக வெற்றியைக் காணமுடியாது. கடற்கொந்தளிப்புகளுக்கும், புயற்காற்றுக்கும் இடமுண்டு.

பரவுவார் பாவம் பறைக்கும்மடி
மதியெண் கணங்களும்
பாடும்மடி
திரைவிரைவுதென் கெடில
நாடன்னடி
திருவீரட்டானத் தெஞ்
செல்வன்னடி
— திருநாவுக்கரசசுவாமிகள்

## வரி விளம்பரம்

### தேவை

வீடுகளுக்குச் சென்று விற்பனைசெய்ய பெண் விற்பனையாளர்கள் தேவை. சம்பளம்: 10-00. விபரங்களுக்கு: T. விநாயகம் இன்டஸ்ரீஸ், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 255

### கல்வி

மாணவர்களே! மாணவியர்களே! பலகாலமாக தொழிற்கல்வி அளித்துவந்த வர்த்தக கணக்கியல் கல்லூரி திறமையான ஆசிரியர்களால் நடத்தப்படுகிறது. வகுப்புக்களுக்கு முந்துங்கள் — இடம் சீதாசோடா பாக்டரி முன்னால், 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 277

### விற்பனைக்கு

F R மொடல் 'லிஸ்ரர்' மரம் அரியும் என்ஜின் வாட்டவில் 36 கோஸ் பவர், சக்கர வால்கள் மற்றும் சகல சாதனங்களும் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு:- த. சுப்பிரமணியம், மூளாய் வீதி, வட்டுக்கோட்டை, அல்லது "சந்திரா வெல்டிங் வேக்ஸ்" 6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 288

### பயிற்சி வகுப்புகள்

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை: கணக்கியல், வர்த்தகம். க. பொ. த. (சாதாரணம் / உயர்தம்) :- சுருக்கெழுத்து. தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம், அரசியல், இரசாயனம், பௌதிகம், பிரயோககணிதம், தூயகணிதம் உயர்தரகணிதம், எண்கணிதம் உயிரியல், ஆங்கிலம் முதலியன. வர்த்தகக் கல்லூரி நீதிஸ்தல வீதி, பருத்தித்துறை 287

---

## சனசமூகநிலைய உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

வண்ணை வடகிழக்கு சனசமூக நிலையத்தின் புதிய உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்-திரு எஸ். சின்னத்துரை உபதலைவர்கள்-திரு என். செல்லப்பா திரு ஜே. சேனாதிராஜா செயலாளர்-சி. இராமலிங்கம் உடசெயலாளர்-திரு வெற்றிவேலு தனாதிகாரி திரு வி. இராசரத்தினம் உப தனாதிகாரி எஸ. சந்திரகாந்தன் நூல்நிலையஸ்தர் எஸ பஞ்சலிங்கம் உபநூல்நிலையஸ்தர் ஏ. குகராசா கணக்குப்பரிசோதகர் திரு ஏ. சோமஸ்கந்தர் சமாஜப்பிரதிநிதியாக முகாந்திரம் ஈ. பி. இராசையா ஜே.பி. மற்றும் நிர்வாகசபை அங்கத்தவர்களாக ஆர். நடராசா என். சின்னத்துரை விஸ்வேஸ்வரன் கே. கனகலிங்கம் என். கருணநந்தன் எம். சிவலிங்கம் வி. எஸ். சண்முகலிங்கம் என். தில்லைநாதன் எம். சிவபாதம் கே. தனபாலசிங்கம் எஸ. டத் மநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி நிலையத் தலைவர் நீர்வாவிடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையிலுள்ள பொதுக்குளம் மிகவும் சீர்கெட்டநிலையில் இருந்தது கண்டு அதைத் திருத்த எவரும் முன்வராக்காரணத்தால் தாமே முன்னின்று சிரமதான முறையிற் புதுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

---

## 300 ஆபிரிக்கருக்கு உபகார சம்பளம்

புதுடில்லி, மே 20

இந்தியாவில் 300 ஆபிரிக்க மாணவர்கள் உபகாரச்சம்பளத்தின் கீழ் கல்வி கற்றுவருதாய் அறிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ ஆசிரியர்களின் திரிசங்கு சொர்க்க நிலை!

யாழ்ப்பாணம், வியாழன்

மாணவ ஆசிரியர்களாக கடமையாற்றிக்கொண்டிருக்தாலுங்கூட ஆசிரியர் என்ற பிரிவின்கீழ் ஆசிரிய விசேட பயிற்சிக்கான புகுமுகப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத திரிசங்கு சொர்க்கநிலையில் தமிழ்ப்பகுதி மாணவ ஆசிரியர்களின்நிலைமை உள்ளது. இவர்கள் ஆசிரியர்களாகவே பாடசாலைகளில் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தாலும்கூட மாணவர்கள் என்ற பிரிவின் கீழேயே விசேட பயிற்சிக்கான புகுமுகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டியுள்ளன.

கடந்த மே 30-ந் திகதி வெளியான அரசாங்க வர்த்தமானியில் விசேட ஆசிரிய பயிற்சிகளுக்கு மாணவர்களை நேர்முகதெடுப்பதற்கான புகுமுகப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. 'ஆசிரியர்' என்ற சொல்லுக்கு தகுதியுடையவர்கள் ஒரு வருடத்துக்கு மேல் ஆசிரியர்களாக கல்வி கற்பித்தவர்கள் தான் என்று அதில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் சென்ற செப்டம்பர் மாதத்தில் நியமனம் பெற்ற மாணவ ஆசிரியர்கள் "ஆசிரியர்கள்" அல்ல, இவர்கள் ஒன்பது மாதங்கள் மட்டுமே ஆசிரியர்களாக பணியாற்றியுள்ளதால் ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய விசேட பயிற்சிகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்யும் போது ஆசிரியர்களுக்கு கிடைக்கக்கூடிய சலுகைகள் அவர்களுக்குகிடையாது. மாணவர்களாகவே இவர்கள் கருதப்படுவார்கள்.

சகல மாகாணங்களிலும் மாணவ ஆசிரியர்களை தெரிந்தெடுப்பதற்கான பரீட்சை 1963-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரே தினத்திலேயே நடைபெற்றது. பரீட்சையில் கிடைத்த புள்ளிகளைக் கொண்டே மாணவ ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள். தெரிவு செய்யப்பட்டவர்களில் வட, கீழ் மாகாணங்கள் தவிர்ந்த மற்றைய மாகாணங்களில் உள்ளோர் 1964-ம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே நியமனம் பெற்றார்கள். ஆனால் வடகீழ் மாகாணங்களில் உள்ளவர்களுக்கு செப்டம்பர் மாதத்திலேயே நியமனம் கிடைத்தது. மற்ற மாகாணங்களில் உள்ள மாணவ ஆசிரியர்கள் விசேஷ பயிற்சி தெரிவின்போது ஆசிரியர்களுக்கான சலுகையை பெற முடியும். ஆனால் தமிழ்ப் பகுதி மாணவ ஆசிரியர்கள் மாணவர்களாகவே பரீட்சைக்கு தோற்றவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட மாணவ ஆசிரியர்களில் தமிழ் மாகாணங்களைச் சேர்ந்தவர்கள் "மாணவர்கள்" என்றும் மற்றும்மாணவர்களைச் சேர்ந்தவர்கள் "ஆசிரியர்கள்" என்றும் தான் கூறவேண்டுமோ!!

தமிழ்ப் பகுதியில் உள்ள மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள இந்நிலைமை குறித்து வட்டுக்கோட்டையைச்சேர்ந்தமாணவ ஆசிரியர்கள் தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கத்திடம் முறையிட்டுள்ளனர்.

---

## மக்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி

புதுடில்லி, மே 19

கட்சில், மக்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி அளிக்கும் திட்டம் அடுத்த மாதம் முதல் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்படும என இங்கு அறிவிக்கப்பட்டது.

---

## "யாரிடமேனும் முறையிடலாம்"

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் வெளிநோயாளர் பகுதியில் பலர் டாக்டரிடமிருந்து மருந்துக் குறிப்புகளைப் பெற்றும் மருந்து பெறமுடியாத அவல நிலைக்குள்ளான சம்பவம் நேற்றுமாலை இடம்பெற்றது.

டாக்டரின் குறிப்புத்துண்டுகளைப்பெற்ற நோயாளர் அத்துண்டுகளை குறிப்பிட்ட ஒருவரிடம் பதிவுசெய்ய வேண்டும் அப்படிப் பதவு செல்வதற்காகச் சென்றபோது அவ்விடத்தில் பதிவு செய்வதற்கான லிகிதர் இல்லாதிருந்ததாகவும் ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் சாதாரண ஊழியர் ஒருவர் குறிப்பிட்ட லிகிதரின் ஆசனத்தில் இருந்து கொண்டு நோயாளரின் துண்டுகளைப் பதிவுசெய்ய முடியாதென்று கூறியதாகவும் யாரிடமாவது போய் முறையிடலாம் என்று நோயாளரிடம்கூறியதுமே நோயாளர் மருந்துபெறமுடியாத நிலை ஏற்பட்டதற்குக் காரணம் என்றுகூறப்படுகிறது இதுகுறித்துநோயாளிகளில் பலர்வைத்திய அதிகாரியிடம் புகார்தெரிவித்துள்ளனர்

---

## இளைஞர்கள் 500 ரூபா பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், வியாழன்

தேவாலயத்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த ஒரு இளம் பெண்ணை பலவந்தமாக காரில் கடத்திச் சென்றதாகக் கூறப்படும் சங்கானையைச் சேர்ந்த 5 இளைஞர்களையும் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. வி. கே. ராஜரத்தினம் தலா 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார்.

கல்லூரைச் சேர்ந்த மேரி திரேசா என்ற யுவதி தேவாலயத்துக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த பொழுது தேவாலயத்துக்குச் சமீபத்தில் இளைஞர்களான கந்தையா சுவரத்தினம் செல்லத்துரை திருநாவுக்கரசு, துரைசாமி துரைராஜா, தங்கராசா துரைசிங்கம், சிவலிங்கம் ஆகியோர் காரொன்றில் கடத்திச் சென்றதாக இதுபற்றிக்கூறப்படுகிறது.

இதுபற்றி மேலும் கூறப்படுவதாவது:-

தனது சகோதரியைக் கடத்துவதைக் கண்ட அப்பெண்ணின் சகோதரி பொலிசாருக்கு உடனடியாகத் தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து பொலிசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு அந்தப் பெண்ணையும் இளைஞர்களையும் கைது செய்தனராம். இவர்கள் சங்கானையிலுள்ள ஒரு வீட்டில் இருந்ததாகக் கூறப்படுகிறது, இதன் பின்னர் பொலிஸார் குறிப்பிட்ட பெண்ணை அவரின் பெற்றோரிடம் ஒப்படைத்தனராம்.

விசாரணை இம்மாதம் 31-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

## வவனியாவில் வெசாக்

வவனியா, புதன்

வவனியா கண்டி வீதியில் உள்ள பௌத்த ஆலயத்தில் வெசாக் விழா மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடப்பட்டது.

---

"நேரு-வாழ்வும்பணியும்" என்ற பொருட்காட்சியை இந்தியப் பிரதமர் சாஸ்திரி டாஷ்கண்டில் ஆரம்பித்து வைத்தார்.

---

## சீனாமீது கண்டனம்

கோலாலம்பூர், மே 19

சீனா மீண்டும் அணுகுண்டு வெடித்திருப்பது உலக அபிப்பிராயத்தை மீறிய செயல் என ஆஸதிரேலிய வெளிநாட்டு மந்திரி இங்கு நிருபர்களிடம் கூறினார்.

---

## ஆசிரியர் இடமாற்றம்

கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள பாடசாலையில படிப்பிக்கும் பயிற்றப்பட்ட தமிழாசிரியை யாழ்ப்பாணம்பகுதியில் படிப்பிக்கும் ஆசிரியருடன் ஒத்து மாறுதல் (Mutual Transfer) பெற விரும்புகிறார். பாடசாலை விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். க. நவரத்தினம், 90, சென்ஜோன்ஸ் வழி, கொழும்பு 15. 282

---

## டொமினிக்கனில் கடும் சண்டை

சாந்தா டொமிங்கோ மே 19

டொமினிக்கன் தலைநகரில் பெரும் சண்டை நடைபெற்று வருவதாயும் காயமடைந்த 100 பேர் நேற்று பத்திரமான இடத்திற்கு கொண்டுசெல்லப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

---

## மயிலிட்டியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சி நிலையமொன்றை ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்."

மயிலிட்டியில் கருவாடு காயவைக்கும் மைதானமொன்று உருவாக்கவேண்டும்.

காங்கேசன்துறை ஆஸ்பத்திரி தற்போது சீமெந்து தொழிற்சாலைக்கருகாமையிலிருப்பதால் ஆஸ்பத்திரி நோயாளர்களது சுகாதாரம் பாதிக்கப்படுவதாகக் கருதி இப்போதிருக்கும் நிலையிலிருந்து இடமாற்றம் செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது. காங்கேசன்துறை பட்டினசபை எல்லைக்குள் இருக்கும் சனிட்டோரியத்தை பண்ணைக்கு மாற்றி சனிட்டோரியத்தை சிவில் ஆஸ்பத்திரியாக்குமாறு சபைகேட்டுக்கொண்டது.

சமீபத்தில் இரு மந்திரிகள் காங்கேசன்துறைக்கு விஜயம் செய்தபோது இது பற்றி சபைத்தலைவருக்கோ சபைக்கோ உத்தியோகபூர்வமாக அறிவிக்காதது பற்றி சபை கண்டனம் தெரிவித்தது.

---

## சனசமூக நிலைய வருடாந்தக் கூட்டம்

கிளிநொச்சி வியா

கணேசபுரம் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிலையத்தலைவர் திரு. அ. எட்வேட் கூட்டத்திற்குதலைமை வகித்தார். பின்வருவோர் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. அ. எட்வேட், காரியதரிசி: திரு இ. நடராசா, தனாதிகாரி: திரு. க. கணேஷபிள்ளை, பின்வருவோர் நிர்வாக உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

திருவாளர்கள்: இ. கணேசப்பெருமாள், மு. தில்லையம்பலம், க. மார்க்கண்டு, வ. குமாரசாமி, க. சிவஞானம், மு. தர்மபாலன்.

---

## ஆபிரிக்காவில் புதிய பாக். தூதரகங்கள்

கராச்சி, மே 20

ஆபிரிக்காவில் பாகிஸ்தான் புதிதாகப் பல ராஜீய தூதரகங்களை திறப்பதென பாகிஸ்தான் தீர்மானித்திருக்கிறது.

---

# 'வஞ்சம் தீர்க்கும் நடவடிக்கையல்ல'

## கல்விமந்திரி அறிவிப்பு

பம்பலப்பிட்டி, வியா.

'கடந்த பொதுத்தேர்தலின் போது அரசியலில் ஈடுபட்ட ஆசிரியர்கள்மீது வழக்குத் தொடர இருப்பதாகவும் வஞ்சம்தீர்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் என மீது சிலர் தவறான அபிப்பிராயம் கொள்கிறார்கள். இதனை நான் முற்றாக மறுக்கின்றேன்.'

இவ்வாறு கல்வி மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல தெரிவித்துள்ளார்.

அரசியலில் ஈடுபட்ட சில ஆசிரியர்கள தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டது சம்பந்தமாக அவர் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியலில் ஈடுபட்ட ஆசிரியர்களின் நடவடிக்கை சம்பந்தமாக விசாரணை செய்வதற்கு வித்தியாதிபதியால் நியமிக்கப்பட்ட கமிட்டி இந்த ஆசிரியர்கள கடந்தபொதுத்தேர்தலின் போது நடந்துகொண்ட முறை பற்றி விசாரணை நடத்தி அறிக்கை வெளியிட்டது. இத்தகைய ஆசிரியர்கள சிலர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசியல் கூட்டங்களில்பேசியதற்காகவும் குறிப்பிட்ட சில அபேட்சகர்களுக்காக ஆதரவு தேடியதற்காகவும் சட்டவிதிகளை மீறியதற்காகவுமே ஆசிரியர்களமீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

---

## புதுவருட உத்தியோகத்தர்கள்

வவனியா, வியா

வவனியா சனசமூக நிலைய சமாசத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் வவனியா நகரசபை மண்டபத்தில் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு சிவராசா தலைமையில் நடைபெற்றது. இவ்வமயம் புதிய உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்: எம். பொன்னையா, உப-தலைவர்கள்: திரு. எஸ். அண்ணாமலை, திரு. எஸ். அப்புகாமி, காரியதரிசி: திரு. க. சுப்பிரமணியம், உபகாரியதரிசி: திரு. இ. கனகையா, தனாதிகாரி: திரு. பி. எஸ். அப்துல்லா 15 பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரியப்பட்டது.

---

## பங்கீட்டரிசிப் புத்தகம் கிடைக்கவில்லை

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவுப்பகுதியில் பங்கீட்டரிசிப் புத்தகமில்லாதவர்கள் தங்கள் குறைகளை வவனியா எம். பி. திரு. டி. சிவசிதம்பரத்திடம் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவுப் பிரிவு காரியாதிகாரியிடம் பங்கீட்டரிசி புத்தகம் வழங்குமாறு கோரி ஆயிரம் பேர் வரை கடந்த வருடம் விண்ணப்பித்திருந்தனர். ஆனால் இதுவரை எவருக்கும் பங்கீட்டரிசிப் புத்தகம் வழங்கப்படவில்லையென அறியப்படுகிறது.

---

## ஞானசம்பந்தர் குருபூசை

அளவெட்டி, வியாழன்

அளவெட்டி கிழக்கு சனசமூக நிலைய பாலர் கழக ஆதரவில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் குருபூசை நேற்று முன்தினம் நடைபெற்றது.

ஞானசம்பந்தர் என்னும் பொருள் பற்றி நிலையத்தலைவர் திரு. வ. க. செல்லத்துரை உரைநிகழ்த்தினார்.

---

## இறக்குமதி-ஏற்றுமதியாளர் கருத்து

பம்பலப்பிட்டி வியாழன்

கள்ளச் சந்தைக்காரர்களினதும் பதுக்கல் காரர்களினதும் சொத்துக்களை பறிமுதல் செய்யவேண்டுமென இறக்குமதியாளரும் ஏற்றுமதியாளரும் வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிசுக்கு யோசனை கூறியுள்ளார்கள்.

இவர்கள் மந்திரியை நேற்று சந்தித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்கள்.

வர்த்தகத்தில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் கொண்டிருக்கும் ஏகபோக உரிமைதான் பொருள்களின் விலையுயர்வுக்கு காரணம் என்றும் இவர்கள் மந்திரிக்கு சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

---

## 'மீண்டும் பிரதமராவேன்'

—சிறிமா

பாணந்துறை, வியாழன்

நான்கு மாதங்களுக்குள் நான் மீண்டும் பிரதம மந்திரியாவேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இங்கு நடைபெற்ற வெசாக் விழாவில் பேசும் போது கூறினார்.

தேசிய அரசாங்கம் அதிக நாட்கள் நீடிக்காதென்றும், திருமதி பண்டாரநாயக்கா மீண்டும் இலங்கையின் பிரதமராவாரென்றும் கொலன்னாவை எம். பி. திரு. டி. எஸ். சமரசிங்கா பேசும் போது கூறினார்.

---

## இளைஞர் விவசாய கழகக் கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்

இருபாலை இளைஞர் விவசாயக் கழகத்தின் புனருத்தாரணக் கூட்டம் கோப்பாய் மத்திய சனசமூக நிலையமண்டபத்தில் திரு க. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது.

இளம் விவசாயிகளின் உதவியால், விவசாயத்தை விஞ்ஞான ரீதியாகச் செய்வது மிகவும் சுலபம் என்று தலைவர் பேசும்போது கூறினார்.

---

## மீண்டும் வேலை

பம்பலப்பிட்டி, வியா

கட்டாய ஓய்வு வழங்கப்பட்டிருந்தபோது மராமரத்து இலாகா ஆராய்ச்சி பயிற்சிப் பிரிவு உதவி டைரக்டர் திரு. வி. ஹேரத்துக்கு மீண்டும் வேலை வழங்கப் பட்டுள்ளது. கட்டளைகளை மீறியதற்காக முக்கிய பொது மராமரத்து மந்திரி திரு. சம்பி குணவர்தன இவருக்கு கட்டாய ஓய்வு வழங்கியிருந்தார்.

---

## தேரோவின் கருத்து

மாரவில்லை, வியாழன்

மோசடி லஞ்சக் குற்றச்சாட்டுகளில் சம்பந்தப் பட்டவர்களின் சொத்துக்களை அபகரிக்க சட்டத்தில் தேசிய அரசாங்கம் புதிய விதிகளைச் சேர்க்க வேண்டும் என்று தர்மரத்ன தேரோ இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

---

## நினைவு நிதி

புதுடில்லி, மே 20

பிகார் ராஜ்யம் நேரு நினைவுக்காக நேற்று 1 லட்சம் ரூபாவை ஸ்ரீமதி இந்திரா காந்தியிடம் வழங்கியது.

இலங்கைத்திருநாடு ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் சுன்னாகம் சிவன்கோவில் மேல வீதி 86-ம் இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு மே மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org